நாள்.07.11.2025

**RLTOP எண்.3/2025**
**பெயர்.நக்கீரன்**

**த.பெ.ராசு வேளாளர்**

**<u>ம.சா.1– எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மனு சொத்திலுள்ள 2 கடைகளின் உரிமையாளர் என் அப்பா ராசு வேளாளர் என்றால் ஆமாம். இந்த 2 கடைகள் உட்பட மற்ற கடைகள் எல்லாம் அவருடையதுதான் என்றால் ஆமாம். ராசு வேளாளருக்கு எத்தனை மனைவிகள் என்றால் நீதிமன்றத்தில் ஒரு மனைவி என்றுதான் தீர்ப்பாகியுள்ளது. வாரிசுகள் 4 பேர். அந்த தீர்ப்பு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சொத்துகளை பொறுத்து பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் மொத்த சொத்திற்குமே தாக்கல் செய்துள்ளோம். யார் மீது யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என் தாயார், குழந்தைகள் நால்வர் மீதும் மற்றும் சிலர் மீதும் தாக்கல் செய்துள்ளார். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 2020 ல். மனு கடைகள் உட்பட காம்ப்ளக்ஸ் எனக்கு மட்டும் உரிமை என்று காட்ட என்னிடம் ஆவணம் உள்ளதா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை நான் தான் பராமரித்து வருகிறேன். என்னைபோல மற்ற வாரிசுகளும் நாங்கள்தான் பராமரித்து வருகிறோம் என்று எதிர்மனுதாரரிடம் கூறி வருகிறார்கள் என்றால் இல்லை.

மனு கடைகள் உள்ள காம்ப்ளக்ஸிற்கு மற்ற வாரிசுகளும் உரிமையாளர்கள் என்றால் ஆமாம். இந்த மனுவில் அவர்களையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். என்ன பரிகாரம் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாடகை கொடுக்கவில்லை அதனால் காலி செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். நான் எதிர்மனுதாரரிடம் பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தம் ஏதும் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு பதிவு செய்ய நான் அவரிடம் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். நான் எதிர்மனுதாரருக்கு சட்டம் மாறியதுபோல் புதிய வாடகை ஒப்பந்தம் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அறிவிப்பு அனுப்பினேனா என்றால் ஆமாம்.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.